# மெட்ரோவில் 6 நாளில் 4.89 லட்சம் பேர் பயணம்

**சென்னை, பிப். 21–**

மெட்ரோ ரயிலில், ஆறு நாட்களில், 4.89 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னையில், விமான நிலையம் வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப் படுகிறது.

இந்த ரயில் போக்கு வரத்து, விமான நிலை யத்தில் இருந்து, டி.எம். எஸ்.,வரை இயக்கப்பட்டு வந்தபோது, தினமும், 60 ஆயிரம் பயணியர் சென்று வந்தனர்.



■ கிண்டி மெட்ரோ ரயில் நிலையத்தில், பயணியர் வசதிக்காக, 'பேட்டரி' மூலம் இயங்கக் கூடிய, இரு சக்கர வாகனம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## அதிகரிப்பு

கடந்த, 10ம் தேதியில் இருந்து, தேனாம் பேட்டை, டி.எம்.எஸ்., நிலையத்தில் இருந்து, வண்ணாரப்பேட்டை வரை மெட்ரோ ரயில் நீட்டிக்கப்பட்டுள்ளதால், பயணியர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மெட்ரோ ரயிலில், கடந்த, 14ம் தேதி முதல், 19ம் தேதி வரை, ஆறு நாட் களில், 4.89 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.

மெட்ரோ ரயில் அதிகாரி கூறியதாவது:

மெட்ரோ ரயிலில், பயணியர் வருகையை அதிகரிக்க, பல்வேறு நட வடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

மெட்ரோ ரயிலில் வரும் பயணியர், செல்ல வேண்டிய இடங்களுக்கு சென்றுவர, 25 நிலையங் களில், வாடகை இல்லா சைக்கிள் வசதி செய்யப் பட்டுள்ளது. இவ்வசதி, 32 நிலையங்களிலும் செயல் படுத்தப்பட உள்ளது.

## 1.25 லட்சம் பேர்

இத்துடன், குறைந்த கட்டணத்தில், ஷேர் ஆட்டோ, கார், டூ – வீலர் வசதிகள், அனைத்து நிலை யங்களிலும் அமல்படுத்த, தனியார் நிறுவனங்களுடன் பேச்சு நடந்து வருகிறது.

கிண்டி உட்பட, நான்கு நிலையங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள, மின் சார டூ – வீலர் வசதிக்கு, பயணியரின் வரவேற்பை யொட்டி, மற்ற நிலையங் களிலும் அமல்படுத்தப் பட உள்ளன.

மெட்ரோ பயணியரின், 'டிராவல்' அட்டைக்கு, 10 சதவீதம்; 'டிரிப்' அட் டைக்கு, 20 சதவீதம் கட் டண சலுகை வழங்கப்படு கிறது. இதனால், மெட்ரோ ரயிலில் தினமும், 1.25 லட்சத்துக்கு மேல் பயணியர் வருவர் என, எதிர்பார்ப்பு உள்ளது.

இவ்வாறு அதிகாரி கூறினார்.